# நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்கள்



கல்விச் சேவை மற்றும் நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்கள் என்ற இப்பகுதியில் இம்மாதம் இடம்பெறுபவர் விவசாய விஞ்ஞானி, இந்தியர்களின் பசிப்பிணியைப் போக்கிய பசிப்பிணி மருத்துவர், பசுமைப் புரட்சியின் தந்தை, முதல் உலக உணவுப் பரிசு (நோபல் பரிசுக்கு இணையானது) பெற்ற உத்தமர், 55க்கு மேற்பட்ட உலக நாடுகளின் பல்கலையில் கௌரவ டாக்டர் பட்டம் பெற்ற உலகம் சுற்றும் வாலிபன், ஏழை விவசாயிகளின் இதய தெய்வம், உலக நாடுகளின் அட்சயப் பாத்திரம், ஒட்டிய வயிறுடன் இருந்த இந்திய விவாசாயியைக் கட்டித்தயிருடன் உண்ண வைத்தக் கலியுகக் கிருஷ்ணன். இப்படிப் பல அடைமொழிகளுக்குச் சொந்தக்காரார், வேளாண் வேந்தர் டாக்டர் M.S. சுவாமிநாதன். உண்மை வெறும் புகழ்ச்சியில்லை. இனி, அவரைப் பற்றியும் அவருடைய சாதனைகளைப் பற்றியும் காண்போம்.

**இனிக்கும் இளமை**

தான் பிறந்த மண்ணுக்கும் மக்களுக்கும் தனது பணி பயன்பெற வேண்டும் என்று எண்ணி மருத்துவத் துறையைத் தேர்ந்தெடுத்து அதில் பட்டம் பெற்று மருந்துவ சேவையைக் கும்பகோணத்தில் செய்து வந்தவர்தான் மன்கொம்பு சாம்பசிவன் அவர்கள். திரு. சாம்பசிவன் அவர்களின் மூதாதையர்கள் 1700களில் இன்றைய கேரளா, ஆலப்புழா குட்டநாட்டை ஆண்டுவந்த மகாராஜா ரவிவர்மா என்ற அரசர் பக்கத்து நாடுகளுக்குச் செல்கின்ற பார்வையிடுவதற்கு வருகின்ற வழியில் தஞ்சாவூர் வந்து சேர்ந்தார். அப்போது அங்குப் புகழ்மிக்க அறிஞர்களின் குழுவைப் பார்த்தவுடன் அவர்களில் ஒருவரை எங்கள் நாட்டிற்கு அனுப்புங்கள் என்று மன்னனிடம் பணிக்க அவரும் ஒரு அறிஞரை அனுப்பினார். அப்படி அனுப்பப்பட்டவர் திரு. இஞ்சி வெங்கடாசலம் அய்யர் அவர்கள். அவர்களின் பரம்பரையில் வந்தவர்தான் டாக்டர் சாம்பசிவன் அவர்கள். சாம்பசிவன் மற்றும் தங்கம்மாள் தம்பதி களுக்கு 7.8.1925இல் மகனாகப் பிறந்தார் மன்கொம்பு சாம்பவசிவம் சுவாமிநாதன் அவர்கள். அன்றைய சென்னை ராஜதானியிலே தலைசிறந்த மருத்துவராக சுவாமிநாதன். டாக்டர் சாம்பசிவன் விளங்கியதால் இளமைக்காலம் இனிமையாகச் சென்றது. செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தார்.

**விதியின் விளையாடல்**

இனிமையாகக் சென்று கொண்டிருந்த சுவாமிநாதனின் வாழ்கையில் விதி விளையாடியது. இவரது தந்தையார் டாக்டர் சாம்பசிவன் அவர்கள் 12.11.1936இல் அவருடைய 36 வயதில் அமரரானார் அப்போது சுவாமிநாதன் அவர்களுக்கு 11 வயது. திக்கற்றோருக்குத் தெய்வமே துணை என்பார்கள் ஆனால், டாக்டர் சுவாமிநாதன் அவர்களுக்குத் தெய்வ வடிவில் அவருடைய சிறிய தகப்பனார் திரு. நாராயணசாமி அவர்கள் துணைநின்றார். இன்று உலக உணவுத் தோழன் டாக்டர் M.S. சுவாமிநாதன் அவர்கள் நமக்குக் கிடைப்பதற்கு பெரும் காரணகர்த்தாவாக இருந்தவர் மன்கொம்பு திரு. நாராயனசாமி அவர்கள்தான். இவருடைய பொறுப்பான வழிகாட்டுதலால் கும்பகோணம் சிறுமலர் உயர்நிலைப்பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்ததுடன் இளங்கலை விலங்கியல் பட்டத்தைத் திருவிதாங்கூர் பல்கலையில் 1944ஆம் பயில வழிவகை

செய்தார். விடுமுறை நாட்களில் தமிழ்நாடு, கேரளம் என மாறி மாறி வருகின்றபொழுது ஒவ்வொரு பகுதி யிலும் உள்ள வறுமைநிலையையும் மாறுபட்ட பயிர் வித்தியாசங்களையும் கண்டறிந்தார். இளமை யிலிருந்தே யாரையும் சாராது சுயமாக சிந்தித்துச் செயல்படுவது சுதேசிப் பொருளாதாரத்தில் ஆழமான நம்பிக்கை, தேசநலன் போன்ற தந்தையாரின் வாழ்வியல் கொள்கைளை, தன் வாழ்விலும் மேற் கொள்வது என்று உறுதிபூண்டார். விவசாயிகளின் வறுமை இவரைப் பாதித்தது.

கஞ்சி குடிப்பதற்கிலார் – அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே – நிதம்
பரிதவித்தே உயிர்துடித்து
அஞ்சி மடிகின்றாரே – இவர்
துயரங்களைத் தீர்க்கவோர் வழியில்லையே.


என்ற பாரதியின் வரிகளின் பாதிப்பை விவசாயி களின் பட்டினியால் சுவாமிநாதன் நன்கு உணர்ந் தார். இதன் பயனாகவும் வேளாண்மையில் மரபுக்கும் சூழ்நிலைக்கும் இருந்த தொடர்பு இவரைக் கவர்ந் தாலும் 1944இல் விவசாயக் கல்வி பயின்றார்.



**பசுமைப்புரட்சியான தொழிற்புரட்சி**

வேளாண் கல்வி தொடர்பான நூல்களைப் படிக்கத் தொடங்கினார். உலக நாடுகள் கையாளு கின்ற வேளாண் பயிற்சித் தொடர்பான செயல்முறை களோடு நம்நாட்டு முறைகளையும் ஒப்பிடத் தொடங்கினார். மக்கள் தொகைக்கு ஏற்றவாறு உணவு உற்பத்தி கூடிவராததிற்கு வேளாண் துறை யில் புதிய உத்திகளும் கண்டுபிடிப்புகளும் இல்லா மையே முதற்காரணம் என்றுணர்ந்தார். இந்தக் கால கட்டத்தில் தான் வேளாண் விளைச்சலை அதிகரிப் பது எப்படி? என்ற ஆய்விற்குத் தொடக்கமாக இருந்தது. 1945களில் 75 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வதை அறிந்துகொண்டார். 1947இல் செப்டம்பர் 15இல் புதுதில்லி சென்றார். நாடு அடிமைப் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு மாறுபட்ட புதிய சூழல். நீண்ட நெடிய நாள் காலனி ஆட்சியின் பாதிப்புகளும் – பதிவுகளும் சற்றும் அகலாத சூழல். இந்த நாளில்தான் இருபத்தி இரண்டு வயது நிரம்பிய இளைஞனாக சுவாமிநாதன் புதுதில்லி வேளாண் ஆய்வுக் கழகத்தில் சேர்ந்தார்.

புசா கழகத்திற்கு (Pusa Institute) நடுவண் அரசின் பிரதம மந்திரி பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்கள் ஒருமுறை வருகை புரிந்தார். அவரது பேச்சில் இருந்த கீழ்க்கண்ட வாசகங்கள் அவரைக் கவர்ந்தது "Everything else can wait but not agricultures. We cannot allow the Bengal Famine to be repeated in our independent country" நேருவின் சொற்பொழி வால் சுவாமிநாதன் அவர்களுக்கு புதிய உத்வேக மும் உந்துசக்தியும் ஏற்பட்டது. இதனால் வேளாண் துறையில் புதுமைகளைக் கண்டறிந்து செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணம் வேகம் பிடித்தது. 1949 – 50 வரை UNESCOவில் உறுப்பினராக நியமனம் பெற்று நெதர்லாந்திலுள்ள வேகனின்ஜின் Agicultural university at wageningen the Netherlands வேளாண்பல்கலையில் மரபணுவியல் துறையில் ஆய்வு மேற்கொண்டார். இந்தியாவைப் பொறுந்தவரை பசுமைப்புரட்சிக்கு வித்திட்டவர்கள் இருவர். இருவருமே தமிழ்கள் என்பது பெருமைப் படவேண்டிய விஷயம். ஒருவர் சி. சுப்ரமணியம் மற்றொருவர் மன்கொம்பு சுவாமிநாதன். ஓராண்டுக்குப் பின் கேம்பிரிட்ஜ் பல்கலையில் வேளாண் ஆராய்ச்சிப் பணியில் சேர்ந்தார். வேளாண் கல்வியில் "மரபணு வியல் துறையில்" ஆய்வறிக்கை பல வெளியிட்டார். இதனைக் கண்ட அமெரிக்க நாட்டின் விஸ்கான்சின் பல்கலைக்கழகம் இவரது அறி வாற்றலைப் பாராட்டி ஆய்வு உறுப்பினராக சுவாமிநாதன் அவர்களை



நியமித்தது. இந்தப் பதவி இவருடைய அறிப்பசிக்கு நல்ல தீனியாக இருந்தது.

**முனைவர் பட்டமும் நாட்டுப்பற்றும்**

இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலையில் 1952இல் பயிரிடும் செலவு குறைந்த தாவரங்களில் குரோமோ சோம் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும் முறை யைத் தரப்படுத்தி விவான ஆய்வு சமர்ப்பித்து முனைவர் பட்டம் பெற்றார். முனைவர் பட்டத்திற்கு இவர் எடுத்துக்கொண்ட தலைப்பு "Species Differentiation and nature of Polyploidy in Tuber Bearing Solanom Species" என்பதாகும். நவம்பர் 1952லிருந்து ஜனவரி 1953 வரை அமெரிக்க நாட்டின் விஸ்கான்சின் பல்கலையில் ஆய்வு மேற்கொண்டார். விஸ்கான்சினில் இருந்தபோது தான் உருளைக்கிழங்கின் தோற்றம், வேறுபாடு தொடர்பான ஆய்வுகள் மற்றும் உருளைக்கிழங்கு வகைகளில் கடினமான ஒட்டுவகைகளைக் கண்டுபிடித்தார்.

மரபு உயிர்மங்களின் கூறுபாடுகள் (Cytogenetics) தொடர்பாக ஆய்வு செய்து மாநிலத்தில் முதலா வதாகத் தேறி பட்டயம் பெற்றார். அதேசமயம் அப்போது நடைபெற்ற இந்திய அமைச்சக நிர்வாகப் பணி (ஐ.ஏ.எஸ்) தேர்விலும் வெற்றி பெற்றார். இந்தியக் காவல்துறையில் மிக உயர்ந்த அந்தஸ்தான பதவி கிடைத்தும் அதை அவர் ஏற்கவில்லை. சுவாமிநாதனது எண்ணமும் பார் வையும் நாட்டின் லட்சோப லட்சம் ஏழை விவசாயி களின் கண்ணீரைத் துடைப்பது எப்படி என்ற சிந்தனையை நோக்கியே இருந்தது. காரணம் "ஆற்றுக்குள் இருந்து கொண்டு அரோகரா என்றாலும் சோற்றுக்குள் இருப்பான் சொக்கநாதன்" என்பார்கள். அந்த எண்ணத்தின்படி சோற்றுக்காகக் கஷ்டப்படும் விவசாயியின் வேர்வையைப் பற்றியே சிந்தித்து அவற்றைக் களைவதற்கான செயல் பாடுகளில் ஈடுபட்டார். "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரம் தமிழ் மொழியில் இயற்றல்வேண்டும்" என்ற பாரதியின் அடிகளை ஒட்டி இவரும் மேல் நாட்டில் தான் கண்டவை கேட்டவை பயின்றவை தாய்நாட்டிற்கு பயன்தரவேண்டும் என்ற நோக்கில் 1954 ஜனவரி மாதம் சுவாமிநாதன் அவர்கள் தாயகம் திரும்பினார்.

**பசிப்பிணியைப் போக்க உதவும் பாரத நாட்டு அரசாட்சிப்பணி**

தாயகம் திரும்பிய டாக்டர் சுவாமிநாதன் ஒரிசா மாநிலத்திலுள்ள கட்டாக்கில் மத்திய அரிசி ஆய்வகத்தில் உதவித் தாவரவியல் வல்லுனராக 1954 ஏப்ரலில் பணியேற்றார். இங்குதான் ஜப்பானிகா மற்றும் இண்டிகா வகை ஒட்டு அரிசி ரகங்களைக் கண்டுபிடித்தார். இதே ஆண்டில் அக்டோபர் மாதம் மத்தியஅரசின் உயிர்மங்கள் பற்றி ஆய்வு செய்யும் இரண்டாம் தர அரசிதழ் பதிவு அலுவலராக புதுதில்லி வேளாண் ஆய்வு நிறுவனத்திற்கு IARIஆல் தேர்வு செய்யப்பட்டார். பின் இரண்டு ஆண்டுகளில் அதாவது 1956இல் பதவி உயர்வு பெற்று முதல்நிலை அலுவலரானார். இவரது இந்தத் தொடர் உழைப்பால் 1961இல் வேளாண் ஆய்வு மையத்தில் தாவரவியல் துறைக்கு இயக்குநராக இந்திய வேளாண்மை ஆய்வு மையம் நியமித்தது.

புசாவில் சுவாமிநாதன் அவர்கள் செய்து காட்டிய சாதனைதான் உலகளாவிய வேளாண் விஞ்ஞானி களையே வியக்க வைத்தது. நாடு முழுவதும் கிட்டத் தட்ட 2000 தொழிற் கருவிகளின் பயன்பாடு, ஒட்டு வித்துக்கள், புதிய கண்டுபிடிப்புகள் போன்ற

வற்றை விஞ்ஞானிகளை வைத்து நடத்திக் காட்டினார். இந்த உத்தி உழவர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இத்திட்டத்தால் மாணவர்கள், விவசாயிகள், விஞ்ஞானிகள், இளநல ஊழியர்கள், பயிற்சியாளர்கள் ஆகியோர் ஒன்றாக இணைந்து செயல்பட வழிவகை ஏற்பட்டது. (Lab to Land) ஆய்வகத்திலிருந்து கழனிக்கு என்ற முறையில் செயல்முறைமூலம் நிரூபித்தார்.

அணுஆற்றல் சார்ந்த ஆய்வுக்கால அமைவுகளைக் கண்டறிய ஆய்வுக்கூடம், (Nuclear Research Lab) தண்ணீர் தொடர்பான தொழில்துறை அறிவியல் ஆய்வு மையம் (Water Technology Centre) பயறு வகைகளை ஆய்வு செய்யும் பரிசோதனைக்கூடம் (Pulse Research Lab) ஆகிய மூன்று பெரிய ஆய்வு மையங்களை டாக்டர் M.S. சுவாமிநாதன் அவர்கள் தனது முயற்சியால் உருவாக்கித் தந்தார். 1972 முதல் 1979 வரை மைய அரசின் வேளாண் துறை களில், இயக்குநர், வேளாண் அமைச்சகச் செயலர் போன்ற பதவிகளை வகுத்தார்.

**பிரதம மந்திரியால் இந்தியாவின் பிரதான மனிதரானார் டாக்டர் M.S. சுவாமிநாதன் அவர்கள்.**

1979இல் அப்போதைய பிரதமர் மொரார்ஜிதேசாய் அவர்கள் டாக்டர் M.S. சுவாமிநாதன் அவர்களை அழைத்து விவசாய மந்திரி சபையின் செயலராக பணிபுரியும்படி கேட்டுக்கொண்டார். அதுவரை இந்தப் பதவிக்கு I.A.S. அதிகாரிகளே நியமிக்கப் பட்டனர். முதன் முறையாக I.A.S. அல்லாத ஒருவர் விவசாயத்துறைச் செயலர் ஆனது இப்போதுதான். இதற்கான காரணத்தை டாக்டர் M.S. சுவாமிநாதன் பிரதமர் மொரார்ஜியிடம் கேட்டார். அதற்கு மொரார்ஜி தேசாய் அவர்கள் ஒரு விவசாயத்துறைச் செயலா ளருக்கு விவசாயம் தெரிந்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்போதுதான் அந்தத் துறைச் சோதனைகளை முறியடித்து சாதனைகளைக் காண இயலும் என்பதை (Right Man to right Job) என்று கூறியதைக் கேட்டு வியப்படைந்தார் சுவாமி நாதன் அவர்கள்.

சுவாமிநாதன் அவர்கள் 1980 முதல் 1982 வரை திட்டக் குழுவின் துணைத்தலைவராக இருந்து வேளாண்மை, கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் பணியாற்றி னார். இதற்குகிடையே 1981 ஆம் ஆண்டு இறுதியில் பிலிப்பைன்ஸிலிருந்து உள்நாட்டு அரிசி ஆய்வு நிறுவனத்தின் தலைவர் டாக்டர் கிளாரன்ஸ்கிரே புதுதில்லி வந்திருந்தார். அப்போது அவர் M.S. சுவாமிநாதன் அவர்களிடம் தங்களை எங்கள் நாட்டின் IRRI ன் நிர்வாக இயக்குநர்கள் தலைமை இயக்குனராக தங்களைத் தேர்வு செய்துள்ளார்கள், ஆகவே, தாங்கள் இதை ஏற்றுக் கொள்ளவேண்டும். தங்களது வருகை எங்கள் நாட்டிற்கு வாழ்வையும் வளத்தையும் கொடுக்கக் கூடியது என நாங்கள் நம்புகிறோம் என்றனர். ஏற்கனவே, திட்டக்குழுவில் வினோபாவின் வர்தா மாவட்டத்தை காந்தி மாவட்டமாக மாற்ற இயலாத வருத்தத்தில் இருந்த சுவாமிநாதன் அவர்களும் பிலிப்பைன்ஸ் போவது என்று தீர்மானித்து அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியிடம் அனுமதி கோரினார். நீண்ட பரிசீலனைக்குப் பின் பணி துறந்து வெளிநாடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

**சர்.சீ.வீ. ராமனின் கனவை நினைவாக்குதல்**

பிலிப்பைன்ஸ் நாட்டில் 1983 முதல் 1988 வரை பணியாற்றினார். உலகளாவிய வேளாண்சாதனை களையும் ஆய்வுகளையும் பணிகளையும் அனை வருக்கும் செய்துகாட்டி பலகோடி டாலர்கள் மதிப்புள்ள விருதுகளையும் குவித்துக்கொள்ளவும் பல அயல்நாடுகள் இவரின் அபரிதமான வேளாண் அறிவைக் கண்டு அண்ணாந்துப் பார்த்து இந்தியரில் இப்படிப் பட்டவர்களும் இருக்கிறார் களா? என்று வியந்து வாழ்த்தும் வகையாகவும் அமைந்தது. பிலிப்பைன்ஸில் அறைகூவலாக திகழ்ந்த பிரச்சினைகளை தீர்த்து ஆறு ஆண்டு களுக்குப் பின் டாக்டர். சுவாமிநாதன் தாய்நாடான இந்தியா திரும்பினார். இதன் பின் சென்னையில் M.S. சுவாமிநாதன் ஆய்வு மையத்தை சர்.சி.வி. ராமன் கனவை நினைவாக்கும் விதத்தில் அமைத்தார்.

இதற்கிடையே 1987 அக்டோபர் மாதம் 6தேதி உலக வரலாற்றில் இந்தியர்களின் குறிப்பாக தமிழர் களின் தலைநிமிர்ந்த நாளாக சிறப்புப் பெற்றது. ஆம் இந்நாளில்தான் உலகளவில் முதல் முறையாக ஒரு தமிழர் உலக உணவுப் பரிசோதனை (First

World Food Prize) அமெரிக்க திருநாட்டின் வாசிங்டனிலே ஸ்சுமித் சோனியன் நிறுவனத்திடம் இருந்து பெற்றார். இப்பரிசு உணவுத்துறையின் நோபல் பரிசுக்கு இணையாகக் கருதப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**உயர் விருதுக்கான காரணங்கள்**

இவருடைய கண்டுபிடிப்புகளில் மகத்தானவை, உலகளாவிய பாராட்டுதலும் விருதுகளும் வரக்காரணமானவை சிலவற்றைக் காண்போம்:

1. Conversation of plan Genetic Resources.
2. Insitu and Exsitu Conservation of Biodiversity.
3. Manipulation of Genes to improve the yield.
4. Quality and Stability of wheat.
5. Rice and Potatoes
6. Identification of the Barriers to High yields in wheat and initiation of the dwarf wheat breeding programmed.
7. Identification of Cyto Toxic Agents in irradiated food material and demonstration of the indirect effects of Radiations.
8. Organization of the National Demonstration and Lab to Land Programmes and management of the 1979 Drought as secretary to the Government of India in the Ministry of Agriculture.

**இந்திய அரசு இவருக்கு வழங்கிய உயரிய விருதுகள் சில**

1. பத்மஸ்ரீ 1967
2. பத்மபூஷன் 1972
3. பத்மவிபூஷன் 1989

**இவரைப் பற்றி மற்றவர்கள்**

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி 'ஜிம்மிகார்டர்' வேந்தருக்கு உலக உணவு பரிசு கிடைத்தபோது தனது கைப்பட கடிதம் எழுதி தனது பாராட்டு தலையும் அமெரிக்க மக்களின் வாழ்த்தையும் தெரிவித்தார் அமெரிக்காவின் 'ராக்பெல்லர்' பல்கலைக்கழகம் உலக வேளாண்மையை இன்றைக்கு உயர்த்தி காட்டியவர் திரு. எம்.எஸ். சுவாமிநாதன். இவரது சாதனை எங்களை வியக்கவைக்கிறது. அமெரிக்க 'யேல்' பல்கலைக்கழகம், திரு. எம். எஸ். சுவாமிநாதன் இன்றைய நூற்றாண்டு நாயகர் உலகின் ஏழை விவசாயிகளது துயர் துடைக்கத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட விஞ்ஞானி. பெண்கள் நலம், வேலைவாய்ப்பு, சுற்றுச்சூழல், சுகாதாரம் ஆகிய துறைகளுக்கு இவர் ஆற்றிய சேவைகள் மகத்தானவை. சரி பாதி நூற்றாண்டு களுக்கு மேல் உலகச் சாதனைகள் பல படைத்த ஒரே மனிதர். இவரைப் இப்பல்கலைக்கழகம் நோபல் பரிசுக்கு உரியவராக பரிந்துரைசெய்வதையே பேராகக் கருதுகிறது. முன்னாள் குடியரசுத் தலைவர் 'ஆர். வெங்கட்ராமன்' டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைசிறந்த விஞ்ஞானி, பண்பாளர் இனிமை யானவர். அதிநுட்பமான அறிவு, ஆய்வுகளிலேயும் இணையற்ற சாதனைகளை புரிந்தவர் கணக்கிலா விருதுகளையும் பதக்கங்களையும் உலக நாடுகளில் பெற்றவர். இந்திய தேசிய வரலாற்றில் அழிக்க முடியாத இவரைப் பற்றிய பதிவுகள் ஆழமாகவே பதியப்படும் என்பதே நிஜம்.

இப்படிப் பல நிலைகளிலும் பல நாட்டவர்களாலும் பாராட்டப்பெற்ற டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களை "கல்விடுடே" இந்த மாத நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்கள் மற்றும் கல்விச் சேவை என்ற பகுதியில் கல்வியாளர்கள் சார்பாக பாராட்டி மகிழ்கின்றோம். இவருடைய சேவை உலகுக்குத் தேவை.

**அரசுக்கு ஆலோசனை**

உலகளவில் சிறப்பு செய்து சாதனைப் படைத்து முதல் உலக உணவுப் பரிசு பெற்று உலகளவில் தமிழனின் தலையை நிமிர்த்த காரணமான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களை தமிழக அரசு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருதுக்கு பரிந்துரை செய்து தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கும் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

**(கல்வி டுடே, ஜூலை 2007-ன் மறுபதிப்பு)**

**தமிழக அரசுக்கு ஒரு வேண்டுகோள்!**

**கோவையில் உள்ள விவசாய பல்கலைக் கழகத்திற்கு டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் பெயரை சூட்டி பெருமைப்படுத்த வேண்டும் என்பதே பெரும்பாலான கல்வியாளர்களின் எதிர்பார்ப்பாகும். நிறைவேற்றுமா தமிழக அரசு?.**